**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 34/2012 P.W. 5 /L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜின்னாபீர்முகமது | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.11..2024.

**இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கைப் பதிவுச் செய்த காவல் அதிகாரி தற்சமயம் பணிமாறுதலில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிசெய்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.12.2010 ம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து ராஜன் என்பவர் சிகிட்சையிலிருப்பதாக கிடைத்த தகவலைப் பெற்று அங்கு சென்று எஸ்தர் கிரேஸ் என்பவரிடம் 20.12.2010 ம் தேதி காலை06.00 மணிக்கு இன்றிமேசன் பெற்று ராஜன் மனைவி எஸ்தர் கிரேஸ் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று 07.00 மணிக்கு காவல்நிலையம் வந்து கருங்கல் காவல்நிலையக்குற்ற எண். 556/2010

சட்டப்பிரிவு 304 (A) இ.த.ச 1860 மற்றும் 134 மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 250 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு விபத்து குறித்த தகவலானது 20.12.2010 அன்று அதிகாலையில் கிடைத்தது. நேரம் குறிப்பிடப்படவில்லை. மேற்படி இன்றிமேசனை நான் தான் பெற்றேன். நான் ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் உள்ள புறக்காவல்நிலையத்திற்கு சென்று தான் இன்றிமேசன் பெற்றேன். மேற்படி இன்றிமேசனை நான் பார்த்தேனா என்றால் - ஆம்.

2. மேற்படி இன்றிமேசனில் 19.12.2010 ம் தேதி சம்பவம் மாலை 06.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம் அடைந்த நபரின் மனைவியிடம் புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அன்றையதினம் வாங்கவில்லை. அ.சா.ஆ.1 ஆன புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. எழுதி வைத்திருந்தார்கள். நான் வாங்கினேன். நான் போகும் தயாராக எழுதி வைத்திருந்தார்கள். மேற்படி புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த தகவலில் மாலை 06.00 மணி என்றும், புகார் மனுவில் 07.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளதைக் குறித்து நான் ஆய்வு செய்தேனா என்றால் நான் ஆய்வு செய்யவில்லை. வழக்கு மட்டும் தான் பதிவுச் செய்தேன். புகார் மனுவின்உண்மை தன்மையை ஆய்வு செய்யாமல் ஒருதலைபட்சமாக நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும், எங்கள் காவல்நிலைய ஆய்வாளருக்கும் இடையே இருந்த பகையின் காரணமாக இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஓட்டியதாக சொல்லப்பட்டுள்ள வாகனம் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தடம் எண் வாகனத்தை மேற்படி தேதியில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஓட்டவில்லை என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரை வழக்கில் புகுத்தவேண்டும் என்பதற்காகவே சம்பவ நேரம் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.ஆ. 1 ஆன புகார் மனுவும், அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையும் பெறப்பட்டு பதிவுச் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் உயரதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க தப்பும் தவறுமாக புகார் மனுப்பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று

சொன்னால் சரியல்ல. நான் என் உயரதிகாரிகளுக்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. காயம்பட்ட நபர் எங்கு வைத்து இறந்தார் என்று எனது விசாரணையில் தெரியுமா என்றால் கருங்கல் அன்னை மருத்துவமனை செல்லும்போதே இறந்து கொண்டு வரப்பட்டார். மேற்படி அன்னை மருத்துவமனையில் இருந்து எங்களுக்கு தகவல் எதுவும் கிடைக்கப்பெற்றதா என்றால் தகவல் கிடைக்கப்பெறவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து ஆறுமுகப்பெருமாள் (System Analysist) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.